செ.கு.எண் : 93

நாள் : 02-03-2012.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 2.3.2012

விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம், அய்யனார் காலனியில் இயங்கி வரும் தனியார் தீப்பெட்டித் தொழிற்சாலையில் 20.2.2012 அன்று ஏற்பட்ட தீ விபத்தில் சரஸ்வதிபாளையம் கிராமத்தைச் சேர்ந்த திரு. மகாலிங்கம் என்பவரின் மனைவி திருமதி. ராமுத்தாய் படுகாயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பலனின்றி 1.3.2012 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த விபத்தில் அகால மரணமடைந்த ராமுத்தாய் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயரச் சம்பவத்தில் உயிரிழந்த ராமுத்தாய் குடும்பத்திற்கு ஒரு லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

ஜெ ஜெயலலிதா
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9